2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைவிலேயே அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகைகளை வழங்கி, பணிகள் நடைபெற உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

### சமுதாயக் கூடம்

***18596—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, செங்கமலப்பட்டி ஊராட்சி, அருந்ததியர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செங்கமலப்பட்டி ஊராட்சியில் ஆதி திராவிடர் மக்கள் அதிகமாகக் குடியிருந்தால், போதுமான இட வசதி இருப்பின், அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி நிலைமைக்கேற்ப அங்கே சமுதாயக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளத்தில் உண்மை ஒளி, வாக்கில் தெய்வ ஒளி, (மேசையைத் தட்டும் ஒலி) செயலில் மின்னல் ஒளி என தமிழக மக்களின் விடியல் ஒளியாய் கதிர் பரப்பும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அன்னைக்கு என் அன்பு வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து இல்லங்களிலும், தீபாவளி ஒளி பரப்பும் கந்தக பூமியின் மைந்தர்களாம் பட்டியலின மக்கள் 47 சதவிகிதத்திற்குமேல் வசிக்கும் பரந்த, விரிந்த ஊராட்சி செங்கமலப்பட்டி. பட்டாசு ஆலைகளில் பெருவாரியாகப் பணிபுரியும் 300-க்கும் அதிகமான அருந்ததியர் மக்கள் குடியிருக்கும் காலனி உள்ளது. அவர்களின் தேவைக்காக சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கமலப்பட்டி ஊராட்சியில் தற்போதைய மொத்த மக்கள்தொகை 2,225 ஆகும். அதில் 1,485 ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மாமன்ற உறுப்பினர் குறிப்பிடும் இடத்தில், 126 அருந்ததியின சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர். ஆதி திராவிட மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாயக் கூடம் கட்டுவதற்குப் போதுமான இட வசதி இருப்பின், நிதி நிலைமைக்கேற்ப ஆய்வு செய்து, சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

2013 அக்டோபர் 24]

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைப்புமிக்க பட்டியலின மக்கள் வாழும் மாவட்டம் விருதுநகர். இந்த விருதுநகர் மாவட்டத்தில் அமெரிக்காவின் Carter Center போல் வடிவமைத்து, நமது தாழ்த்தப்பட்ட சமுதாய படித்த இளைஞர்களுக்காக தொழில் முனைவோர் பயிற்சி மையம் E.D.C. விருதுநகரில் அமைக்கப்பட்டால் பாரதத்தில் முதல் முறையாக மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமையும். தாழ்த்தப்பட்ட படித்த இளைஞர்களுக்கென தாட்கோ மூலமாக விருதுநகரில் தொழில் முனைவோர் பயிற்சி மையம், அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாக போடும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**14—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***32169—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளத்தில் பகுதிநேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.*